# தூரிகை

■ பொன்.குமார்




ஓவியர்களின்
எழுது கோல்
தூரிகை.

என்ன வரைகிறோம்
எதை வரைகிறோம்
தூரிகைக்குத் தெரியாது.
தூரிகையின்றி
வரையவும் முடியாது.

வண்ணங்களில் மூழ்கி
மூச்சுத் திணறினாலும்
வரையும் போது
அடைந்து விடுகிறது
மகிழ்ச்சி.

ஓவியங்களை ரசிப்பவர்கள்
ஓவியர்களை பாராட்டுபவர்கள்
தூரிகைகளை நினைப்பதே
இல்லை.